சார்பு நீதிமன்றம், மேட்டுப்பாளையம்,

முன்னிலை : திருமதி. எஸ்.இந்துலதா, பி.ஏ.,பி.எல்.,

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்

2021 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் வியாழக்கிழமை

(திருவள்ளுவராண்டு 2051,சார்வரி ஆண்டு, பங்குனி திங்கள் 19 ஆம் நாள்)

எச். எம்.ஓ.பி.எண்.18/2021

சதீஸ்குமார் ....மனுதாரர்

/ எதிர் /

கலைவாணி ... எதிர்மனுதாரர்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என் முன்பு 30.3.2021 ஆம் தேதியன்று விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு .பி.சந்திரகுமார், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் அழைப்பாணையை பெற்றுக் கொண்டும் , நீதிமன்றத்தில் ஆஜராகாததால் தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டும் , ஆவணங்களை பரிசீலனை செய்தும், மனுதாரர் தரப்பு வாதுரை கேட்கப்பட்டும் இறுதியாக இந்நீதிமன்றம் வழங்கும்

உத்தரவு

01. மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 01.12.2014 ம் தேதியன்று நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து வழங்க கோரி இந்து திருமண சட்டம் பிரிவு 13(1)(**ia**)(**ib**) பிரிவின் கீழ் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

02. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சாராம்சம்:-

மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 01.12.2014 ம் தேதியன்று தேக்கம்பட்டி, வனபத்ரகாளியம்மன் கோவில் அருகில் உள்ள ரவிச்சந்திரன் திருமண மண்டபத்தில் வைத்து பெரியோர்கள் நிச்சயித்த வண்ணம் உறவினர்கள் , நண்பர்கள் முன்னிலையில் இந்து சமய சம்பிரதாயப்படி திருமணம் நடைபெற்றது . திருமணத்திற்கு

ஆன செலவு மொத்த தொகை ரூ .2,00,000/- ஆகும். அந்த 2 லட்சத்தில் மனுதாரர் குடும்பத்தினர் திருமணத்திற்கு 1,50,000/- லட்சம் செலவு செய்தனர் . எதிர்மனுதாரர் ரூ.50,000/- மட்டுமே கொடுத்தனார் என்றும் , மேலும் மனுதாரரின் பெற்றோர்கள் எதிர்மனுதாரருக்கு ¼ பவுன் மோதிரம் , மற்றும் ½ பவுன் தாலி போட்டனர் . எதிர்மனுதாரரின் குடும்பத்தார் எதிர்மனுதாரருக்கு 10 பவுன் தங்க நகை போடுவதாக கூறினார்கள். ஆனால் எதிர்மனுதாரரின் குடும்பத்தார் எதிர்மனுதாரருக்கு எத்தனை பவுன் நகை போட்டார்கள் என்பது மனுதாரரின் குடும்பத்தார்க்கு இதுநாள் வரை தெரியாது என்றும், மனுதாரரும் எதிர்மனுதாரரும் மனுதாரின் வீட்டில் வச்சினம்பாளையத்தில் கூட்டு குடும்பமாக வாழ்ந்து வந்தனர். மேலும் எதிர்மனுதாரர் மனுதாரருடன் தேவையில்லாமல் சண்டை போட்டு கொண்டு அவருடைய பெற்றோர் வீட்டிற்கு சென்று அங்கேயே 2 வருட காலம் இருந்து வந்தார். மனுதாரரும் அவரது பெற்றோர்களும் ஊர் பெரியவர்கள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் சமாதானம் செய்த போது எதிர்மனுதாரரின் குடும்பத்தார் மனுதாரரை ஊர் மத்தியில் வைத்து அடித்து அவமானப்படுத்திவிட்டனர் . அதனையும் மனுதாரர் பொருட்படுத்தாமல் தன் மனைவியை வீட்டிற்கு அழைத்து வந்து நல்ல முறையில் இல்லற வாழ்க்கையை மேற்கொண்டார் என்றும் , எதிர்மனுதாரர் திருமணம் நடந்து 7 வருட காலமாகியும் இதுநாள் வரை நிரந்தரமாக ஒரு மாதம் கூட மனுதாரருடன் சேர்ந்து வாழ்ந்தது கிடையாது என்றும் அவருடைய பெற்றோரின் வீட்டில்தான் இருப்பார் என்றும், மற்றும் எதிர்மனுதாரர் ஆரம்ப காலத்திலிருந்தே மனுதாரர் மீது நாட்டமில்லாமல் அடிக்கடி பிரச்சனைகள் செய்து கொண்டு குடும்பத்திற்கு ஏற்ற மனைவியாகவும் மற்றும் மருமகளாகவும் இல்லாமல் தான்றோன்றித்தனமாக இருந்து வந்துள்ளார் . மனுதாரர் ஏன் இவ்வாறு நடந்து கொள்கிறாய் என கேட்டால் தனக்கு அறிவுரை கூறும் அளவிற்கு உனக்கோ அல்லது உன்னுடைய பெற்றோருக்கோ தகுதியில்லை என்றும் நீங்கள் இவ்வாறு என் சுதந்திரத்தில் தலையீட்டீர்களானால் நான் உங்கள் மீதும் மற்றும் உங்களுடைய பெற்றோர் மீதும் வரதட்சணை கொடுமை மற்றும் இதர புகார்களையும் அளித்து சிறையில் தள்ளிவிடுவேன் என மிரட்டியுள்ளார். இதனால் மனுதாரர் தன்னுடைய பாதுகாப்பிற்காக எதிர்மனுதாரர் மீது கடந்த 15.11.2006 ம் தேதியன்று துடியலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எதிர்மனுதாரரின் செய்கைகளை குறித்து ஒர் புகார் ஒன்றினை அளித்துள்ளார்.

மேற்படி புகார் மனுவின் ரசீது 884/2016 ஆகும். எதிர்மனுதாரர் சற்று உடல் பருமனாகவும் அதிக எடை உள்ளவராக இருப்பதால், எதிர்மனுதாரருக்கு கர்ப்பபையில் கட்டி உள்ளது என்றும் அந்த கட்டியினை நீக்கி விட்டால் எதிர்மனுதாரருக்கு குழந்தை பாக்கியம் ஏற்படும் என்றும், குழந்தை இல்லாத காரணத்தினால் தான் எதிர்மனுதாரர் இவ்வாறு நடந்து கொள்கிறார் என்று கருதி அவரை சிறுமுகையில் உள்ள ஸ்ரீனிவாஸ் மருத்துவமனைக்கு அழைத்து சென்று பார்த்தார் . மருத்துவரும் பரிசோதித்துவிட்டு எதிர்மனுதாரருக்கு பல்வேறு பிரச்சனை இருப்பதாகவும் அவருக்கு குழந்தை பெற ஏதுவான சாத்தியகூறுகள் அவரிடம் இல்லையென்றும் தெரிவித்துவிட்டனர். அவ்வாறான சூழ்நிலையில் மனுதாரர் தனது மனைவியுடன் நல்ல முறையில் வாழவேண்டுமென்று எண்ணி அவரை நல்ல முறையில் கவனித்து வந்தார் என்றும் , எதிர்மனுதாரரோ மனுதாரருக்கு மனைவி என்ற அடிப்படையில் மனுதாரருக்கு உணவு சமைத்து கொடுக்காமலும் மற்றும் மனுதாரரின் துணிமணிகளை துவைக்காமலும் இருந்து வந்துள்ளார்.. மேலும் மனுதாரர் கணவன் என்ற முறையில் எதிர்மனுதாரரின் அனைத்து தேவைகளும் எதிர்மனுதாரருக்கு செய்து வந்துள்ளார். மேலும் எதிர்மனுதாரர் தன் விருப்பத்திற்கு ஏற்ப நான் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்வேன் என்றும் , மனுதாரரிடம் கடினமான வார்த்தைகளால் பேசி அவரை அவமானப்படுத்தி வந்தார் . கடந்த ஏப்ரல் மாதம் 2018-ம் வருடம் மனுதாரருடன் கோபித்து கொண்டு எதிர்மனுதாரர் அவரது பெற்றோரின் வீட்டிற்கே மீண்டும் சென்றுவிட்டார் , மேலும் மனுதாரர் அவரிடம் சமாதானம் பேச எதிர்மனுதாரரின் வீட்டிற்கு சென்றபோதல்லாம் மனுதாரரை அவமானப்படுத்தி திருப்பி அனுப்பி வைத்துவிடுவார் என்றும் , மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரரிடம் பேசுவதற்கு பயந்து கொள்ள கூடிய சூழ்நிலையை எதிர்மனுதாரர் ஏற்படுத்திவிட்டார் . மனுதாரரும் செய்வதறியாது எதிர்மனுதாரரின் பெற்றோர்களிடம் எதிர்மனுதாரரை அனுப்பி வைக்கும்படி கேட்டு உள்ளார். அதற்கு எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் எங்கள் மகளின் விருப்பத்திற்கு மாறாக நாங்கள் எதுவும் பேச முடியாது என்றும் அவளுக்கு விருப்பமிருந்தால் அழைத்து போ இல்லையென்றால் விட்டுவிடு என மிகவும் அலட்சியமாக பேசியுள்ளனர். மேலும் மனுதாரர் எதிர்மனுதாரரின் பெற்றோர் வீட்டிற்கு எந்த விஷேத்திற்கு சென்றாலும் எதிர்மனுதாரரின் குடும்பத்தார் யாரும் வா என்று கூட

கூப்பிடாமல் அவமானப்படுத்தி வந்தார்கள் . அதையும் மனுதாரர் இதுநாள் வரை பொறுத்துக்கொண்டு எதிர்மனுதாரருடன் வாழ்ந்து வந்தார் . மேலும் எததிர்மனுதாரர் மனுதாரருடன் திருமணமான 7 வருடங்களில் ஒரு நாள் கூட சந்தோஷமான முறையில் தாம்பத்ய வாழ்க்கையில் ஈடுபட்டது கிடையாது , தாம்பத்ய வாழ்க்கையில் எதிர்மனுதாரருக்கு எவ்வித ஈடுபாடும் இல்லாதது போல் நடந்து கொள்வார் . இதுநாள் வரை எதிர்மனுதாரருக்கு தாம்பத்ய வாழ்கை மூலம் குழந்தை பெற்றுக் கொள்ள எவ்வித வாய்ப்பும் இல்லை என்பதால் தான் அவர் அவ்வாறு நடந்து கொண்டிருப்பதாக மனுதாரர் தெரிவிக்கிறார் என்றும் , இதுப்பற்றி எவர் கேட்டாலும் அவர்களை அவமானப்படுத்துவதையே வாடிக்கையாக கொண்டுள்ளார் . எதிர்மனுதாரர் மீண்டும் திருந்தி வந்து மனுதாரருடன் ஒரு நல்ல இந்து குடும்ப மனைவியாக குடும்பம் நடத்துவர் என்ற நம்பிக்கையை மனுதாரர் முழுமையாக இழந்து விட்டதால் மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் நடந்த திருமணத்தை ரத்து செய்து விவாகரத்துக் கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

3. எதிர்மனுதாரர் அழைப்பாணையை பெற்று கொண்டும் , நீதிமன்றத்தில் ஆஜராகாததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டு தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டார்.

04. இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில்?
இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

05. மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம .சா.ஆ,1 ஆக விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ. 1 முதல் ம.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>06 வினாவிற்கான தீர்வு :-</u>

06(1) மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 01.12.2014 அன்று திருமணம் நடைபெற்றது என்பதிலும் , திருமணத்தின் பயனாக தரப்பினர்களுக்கு குழந்தை இல்லை என்றும் மனுதாரரும் எதிர்மனுதாரரும் தற்போது பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள் என்பதிலும் சர்ச்சையில்லை.

06(2) மனுதாரரான கணவர், எதிர்மனுதாரர் தன்னோடு வாழ்ந்த காலத்தில் தன்னை கொடுமைப்படுத்தியும், மனுதாரரை சரிவர கவனிக்காமல் கொடுமை செய்து வந்ததாலும் பலமுறை பஞ்சாயத்து பேசியும் எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ வரவில்லை என்றும் அவரது இந்த செயல்கள் தனக்கு மன மற்றும் உடல் வருத்தத்தை ஏற்படுத்தியிருந்தும் எதிர்மனுதாரருடன் நடந்த திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் . நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணையை பெற்றுக் கொண்டு , எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் தோன்றாததால் அவர் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார். அதனைத் தொடர்ந்து மனுதாரர் தன்னை ம சா 1 ஆக விசாரித்து கொண்டு ம .சா .ஆ 1 முதல் ம. சா. ஆ 5 வரையிலான ஆவணங்களை தன் தரப்பில் குறியீடு செய்துள்ளார் . ம.சா.ஆ 1 மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் நடந்த திருமண பத்திரிக்கை ஆகும். ம.சா.ஆ 2 மனுதாரரும் எதிர்மனுதாரரும் சேர்ந்து எடுத்துக் கொண்ட திருமண புகைப்படம் ஆகும். ம.சா.ஆ 3 மனுதாரரின் ஆதார் அட்டை ஆகும். ம.சா.ஆ 4 மனுதாரர் எதிர்மனுதாரரை மருத்துவமனையில் காண்பித்த மருத்துவ அறிக்கை ஆகும் . ம.சா.ஆ 5 மனுதாரர் எதிர்மனுதாரர் மீது துடியலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்ததற்கான புகார் ரசீது ஆகும்.இவரது சாட்சியம் சர்ச்சைக்குள்ளாக்கப்படவில்லை. ஆக சர்ச்சைக்குள்ளாக்கப்படாத இவரது சாட்சியம் சான்றாவணங்களையும் மற்றும் மனுவையும் ஒன்றாக பரிசீலித்தால் மனுதாரர் எதிர்மனுதாரரால் உதாசீனப்படுத்தப்பட்டு மன மற்றும் உடல் துயருக்கு ஆளாகி உள்ளார் என நம்மால் திண்ணமாக அறிய இயல்கிறது. எனவே மனுதாரருக்கு விவாகரத்து வழங்க வேண்டும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது..

07. இறுதியாக, இந்த மனு அனுமதிக்கப்பட்டு , மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 01.12.2014 ம் தேதியன்று நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து வழங்கி உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு மீண்டும் என்னால் சரிபார்த்து திருத்தப்பட்டு 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/-S.Indulatha,
சார்பு நீதிபதி,
மேட்டுப்பாளையம்,

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 01.12.2014 | திருமண பத்திரிக்கை | அசல் |
| ம.சா.ஆ.2 | -- | மனுதாரரும் எதிர்மனுதாரரும் சேர்ந்து எடுத்துக் கொண்ட திருமண புகைப்படம் | அசல் |
| ம.சா.ஆ.3 | -- | மனுதாரரின் ஆதார் அட்டை | நகல் |
| ம.சா.ஆ.4 | -- | மனுதாரர் எதிர்மனுதாரரை மருத்துவமனையில் காண்பித்த மருத்துவ அறிக்கை | நகல் |
| ம.சா.ஆ.5 | -- | மனுதாரர் எதிர்மனுதாரர் மீது துடியலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்ததற்கான புகார் ரசீது | நகல் |

<u>சாட்சிகள் பட்டியல்</u>

<u>மனுதாரர் தரப்பில்</u>

ம.சா.1 .திரு. சதீஸ்குமார்

.

<u>எதிர்மனுதாரர் தரப்பில்</u>

--இல்லை--

Sd/-S.Indulatha,
சார்பு நீதிபதி,
மேட்டுப்பாளையம்,